# Smerter (vondt) வலிகள்

நோ, நோவு, வலி என்ற சொற்கள் பொதுவாக ஒருவர் அனுபவிக்கும், ஒரு உடற்பாகத்தில் ஏற்படும் தாக்கத்தினாலோ (பாதிப்பு) அல்லது தாக்கப்படுவதாக எண்ணுவதன் காரணத்தாலோ அவருக்கு ஏற்படும் உணர்வாகும். இது உணர்வுடன் சம்பந்தப்பட்டுள்ளமையால் ஒவ்வொருவருக்குமிடையே மாறுபடுவதுடன், இது இப்படித்தான் இருக்குமென அறுதியிட்டுக் கூறமுடியாது. எனவே ஒவ்வொருவருக்குமிடையே அளவும் அனுபவமும் வேறுபடும். ஆயினும் வலியின் தன்மையையும் அளவையும் ஒரு எண்ணிக்கை அளவீட்டிற்குள் (உ-ம் 1-10) வர்ணிப்பதன்மூலம் ஒருவரின் பாதிப்பையும் நோய்களையும் கண்டறியலாம். வலியை வேதனை, என்றும் அழைப்பர்.

1.Nummenhet smerter

விறைப்பு அல்லது மரத்துப்போதலால் வரும் வலி (நோ, நோவு)

2.Kriblende smerter

ஊருதல், எறும்பு ஊர்வது போன்ற நோ

3.Prikkende smerter

ஊசியால் விட்டுவிட்டுத் தொடர்ச்சியாகக் குத்துவது போன்றது (தையல் இயந்திரத்துடன் ஒப்பிடப்படும்), (விறைப்பு விலகும்போது உணரும் நோ)

4.Murrende smerter

(பல்லு)நெருமுதல், (வயிறு)பொருமுதல், எலும்புகள் உராய்தல் (நோவுடன் ஒரு ஒலியையும் உணர்தல்)

5.Brennende smerter / Svir (Sviende) smerter

எரிதல், எரிச்சல், எரிவு

6.Pilende smerter, Utstrålende smerter

வலி ஒரு இடத்தில் ஆரம்பித்து வேறு இடத்துக்குப் பரவுவதுபோன்ற அறிகுறி

உதாரணம்: nevralgier (lumbago med ischialgi முதுகுவலி தொடை மற்றும் காலுக்கு «சுரீரெனப்» பரவுதல்), மாரடைப்பின்போது நடுப்புகுதியில் தோன்றும் வலி தோள், கழுத்துப்பகுதிக்குப பரவுதல்.

7.Huggende/skjærende smerter

கத்தியால் குத்தியது அல்லது வெட்டியது போன்ற நோ

வாளால் அரிவது போன்ற நோ

8.Bankende/pulserende smerter

சம்மட்டியால் அடிப்பது போன்ற நோ, சுண்டிச் சுண்டி வலித்தல் (நாடித்துடிப்புப் போன்று விட்டு விட்டு வலி ஏற்படுதல்)

9.Trykkende smerter / Klemmende smerter

பாரம் அமுக்குவது போன்ற நோ, அம்மிக்கல்லை வைத்தது போன்ற நோ, யானை ஏறி இருந்தது போன்ற நோ

10. Stikkende smerter

சுருக் சுருக்கென்ற வலி, குத்திக் குத்தி வலித்தல்

11.Penetrerende (smerter under samleie) smerter

உடலில் ஒரு பொருள் துளைத்துச் செல்வதால் ஏற்படும் வலி. உடலுறவின்போது ஏற்படும் ஊடுருவல் வலி, அதாவது ஆணுறுப்பு பெண்ணுறுப்புக்குள் நுழையும்போது ஏற்புடும் வலியைக் குறிப்பாகக் குறிக்கும்.

12.Knivstikkende smerter (luftsmerter)

ஈட்டியால் குற்றியது போன்ற நோ, கத்தி சொருகியது போன்ற நோ

13.Dundrende smerter

மிகுந்த வலி (dundrende hodepine, splitting headache = பயங்கரத் தலைவலி, «சரியான» தலைவலி, தலை பிளக்குமளவு வலி)

14.Ising (i tann)

பல் கூசுதல், பற்கூச்சம்

15.Tannverk

பல்வலி, பல்லுக்கொதி

16. Hekseskudd

தீய சக்தி ஒன்று தாக்குவதால் வரும் திடீர் வலி என பேச்சுவழக்கிலுள்ளது. உடலின் எப் பகுதியிலும் காரணமின்றித் தோன்றும் தீவிர வலியைக் குறிக்கும். ஆயினும் திடீர்த் தீவிர நாரிப்பிடிப்புக்கு (lumbago, kink) இச்சொல் சாதாரணமாகப் பயன்படுத்தப் படுகிறது. தமிழில் ‘‘பேய்’’ என்ற சொல்லை ‘‘heks’’ என்பதுபோல் மிகத்தீவிரமான வலிக்குக் குறிப்பிடுகிறோம்.

பேயாக்குத்துது (வயிறுறுவலி)

பேய்வலி (அடிபட்ட இடம்)

பேய்ப்பிடி பிடிச்சுட்டுது (நாரிப் பிடிப்பு)

பேய்க் கொதி கொதிக்குது (கட்டு, சீழ்க்கட்டிய புண் abses, verkebyll)

17.Gnagende smerter

அரித்துத் தின்னுவதுபோன்ற வலி

18.Uutholdelig smerter

தாங்கமுடியாத வலி

19.Elektisk støt

«கரன்ட்» அடித்ததுபோல, மின்சாரம் தாக்கியது போன்ற வலி

20.Krampeaktig smerter

தசைப்பிடிப்பு வலி

பின்வருமாறும் பேச்சுவழக்கில் கூறப்படும் சொற்கள், சொற்றொடர்களை அந்தந்த இடத்துக்கேற்றவாறு புரிந்து கொள்ளவேண்டும். வலிகளின் தன்மை விபரிப்பவரிலும் புரிந்து கொள்பவரிலும் தங்கியுள்ளது.

ஈச்சு ஈச்சு வலித்தல்

இழுத்து இழுத்து வலித்தல்

வாரி வாரி வலிக்குது, வாரி வாரிக் குத்துது

குத்திக் குடைதல்

சுண்டிச் சுண்டி வலித்தல், சுண்டிச் சுண்டி இழுத்தல் (isjias / sciatica)

சுள்ளெண்டு வலிக்குது (மிளகாயைக் கடித்தது போன்ற உணர்வு)

பிரசவ வலி